டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 17.02.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 197 - Madurai | Online Edition

# இந்தியா செயற்கை நுண்ணறிவு மாற்றத்தில் முன்னணியாக திகழ்கிறது

புது தில்லி, பிப்.16

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு தாக்கம் உச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ள உலக நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள், தொழில்துறை தலைவர்கள், புதுமை கண்டுபிடிப்பாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்நுட்ப ஆர்வலர்கள் அனைவரையும் பிரதமர் நரேந்திர மோடி நேற்று வரவேற்றார்.

அனைவருக்குமான நலன், அனைவருக்குமான மகிழ்ச்சி என்ற தலைப்பிலான இந்த உச்சிமாநாட்டின் கருப்பொருள் சமூகத்தினரை மையமாகக் கொண்ட வளர்ச்சி மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய மேம்பாட்டிற்கான செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவது என்ற இந்தியாவின் உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.

சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, வேளாண்மை, நிர்வாகம், தொழில் துறை உட்பட பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவின் மாற்றம் மிக்க பங்களிப்பை பிரதமர் எடுத்துரைத்தார்.

இந்த உச்சிமாநாட்டில் நடைபெற உள்ள புதுமை கண்டு பிடிப்புகள், ஒருங்கிணைப்பு, செயற்கை நுண்ணறிவின் பொறுப்பு மிக்க பயன்பாடு குறித்த உலகளாவிய விவாதத்தை செழுமைப் படுத்தும் என்றும் முற்போக்கான, புதுமையான மற்றும் வாய்ப்புகள் சார்ந்த எதிர்காலத்தை தீர்மானிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். உலகளாவிய செயற்கை நுண்ணறிவு மாற்றத்தக்க நடவடிக்கையில் 1.4 பில்லியன் மக்கள், வலுவான மின்னணு பொது உட்கட்டமைப்பு, துடிப்புமிக்க புதுமை கண்டுபிடிப்பு சூழல், அதிநவீன தொழில்நுட்ப ஆராய்ச்சி மூலம் இந்தியாவின் தலைமைத் துவத்தை பிரதமர் சுட்டிக்காட்டினார். செயற்கை நுண்ணறிவில் இந்தியாவின் முன்னேற்றங்கள், இலட்சியம், பொறுப்பு ஆகிய இரண்டையும் பிரதிபலிக்கின்றன என்றும், தொழில்நுட்ப மேம் பாட்டில் நாட்டை முன்னணியில் திகழச் செய்வதாகவும் கூறினார்.

# உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்

அரியலூர், பிப்.16

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டாரம், பொய்யாதநல்லூர் கிராமத்தில் உழவர் நலத்துறை சார்பில் உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் பொய்யாத நல்லூர் J V திருமண மண்டபத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர், எம்எல்ஏ கு.சின்னப்பா முன்னிலை வகித்து துவங்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் பொ.இரத்தினசாமி தலைமை வகித்து அரியலூர் மாவட்டத்தில் அங்கக வேளாண்மைக்கு அதிக வாய்ப்பு உள்ள தால், விவசாயிகள் அனைவரும் வேளாண்மைத் துறையுடன் இணைந்து அங்கக மற்றும் உயிர்ம வேளாண்மை சாகுபடி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் விவசாயிகளை கேட்டுக் கொண்டார்.

அங்கக வேளாண்மை செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைப்பதுடன், நுகர்வோரிடம் அதிக வரவேற்பு உள்ளதால் அதிக அளவில் அங்கக வேளாண்மை சாகுபடி மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டார். மற்றும் நஞ்சில்லா உணவு உடல் ஆரோக்கியம் மேம்படுவதுடன் மருத்துவ செலவுகளை குறைக்கலாம் என விவசாயிகளிம் தெரிவித்தார். அங்கக வேளாண்மை முறையில் கிடைக்கும் பொருட்கள் இரசாயன நச்சுத்தன்மை இல்லாததாகவும், நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்கிறது எனவும் தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

அங்கக வேளாண்மையில் சத்தான உணவு மற்றும் நச்சுத் தன்மையற்ற விளைபொருட்கள் கிடைக்கிறது எனவும், மண்ணின் ஈர்ப்புத் திறன் மற்றும் வளம் பன்மடங்கு அதிகரிக் கிறது. வெளி இடுபொருட்கள் தேவைப்படாததால் சாகுபடி செலவு குறைகிறது. எனவே, அரியலூர் மாவட்டத்தில் அங்கக வேளாண்மை 745 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது எனவும், வேளாண்மை இணை இயக்குநர் ஜெ.உலகம்மை முருகக்கனி தெரிவித்தார்.

சோழமாதேவி, கீரிடு வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி மு.திருமலைவாசன், அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம் பற்றி விவசாயிகளுடன் தொழில்நுட்ப கருத்துரை ஆற்றினார். அரியலூர் மாவட்டத்தில் விளைவிக்கப்படுகின்ற அங்கக மற்றும் உயிர்ம வேளாண்மை சார்ந்த விவசாயப் பொருட்கள் மற்றும் தோட்டக்கலை பொருட்கள் கண்காட்சிப்படுத்தப்பட்டது.

மேலும் வேளாண்மை துணை இயக்குநர் (பொ) – மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஆ.சாந்தி இந்நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். வேளாண்மை துணை இயக்குநர் (பொ) சு.பரமசிவம், தோட்டக்கலைத் துணை இயக்குநர் வே.பால முருகன், வேளாண் விற்பனை மற்றும் வணிகம் கி.பச்சை யம்மாள், விதைச்சான்று உதவி இயக்குநர் வெ.தரணிகாமாட்சி, அங்கக சான்றளிப்புத்துறை என்.சபாபதி மற்றும் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள், ஆத்மா திட்ட பணியாளர்கள் ஆகியோர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ), செந்துறை ந.செ.சுகந்தி நன்றியுரை கூறினார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனை கூட்டம்



சேலம், பிப்.16

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் உள்ள வேளாண்மைத் துறையில் அட்மா திட்டத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம், தலைவாசல் வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு அட்மா குழு தலைவர் சாத்தப்பாடி மணி (எ) பழனிச்சாமி தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா முன்னிலை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி வரவேற்று பேசினார் மற்றும் அட்மா திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டுக்கான அட்மா திட்டம் இரண்டாம் கட்டமாக செயல் விளக்கத்திடல் அமைக்க மற்றும் விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடத்த ஒதுக்கப்பட்ட நிதியை செலவினம் மேற்கொள்வதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு அனைத்து வட்டார விவசாய குழு உறுப்பினர்களும் ஒப்புதல் அளித்தார்கள். வேளாண்மை அலுவலர் ஜானகி, துணை வேளாண்மை அலுவலர் மணவழகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் பிரகாஷ், நாகராஜ், கால்நடை உதவி மருத்துவர் அனிதா, உதவி தோட்டக்கலை அலுவலர் சக்திவேல், தீபிகா, பட்டு வளர்ச்சி துறை அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்கள்.

விவசாயிகளும் தங்கள் பகுதிகளுக்கு தேவையான திட்டங்கள் பற்றி உயர் அதிகாரியுடன் கலந்து ஆலோசித்தார்கள். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரமேஷ் மற்றும் முத்துவேல் ஆகியோர் செய்திருந்தனர்.



**அன்புடையீர்,**

நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

**நன்றி**

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் கிராம அடிப்படை பயிற்சி




சேலம், பிப்.16

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் எம்.பாலப்பட்டி கிராமத்தில் கிராம அடிப்படை வேளாண் தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. இதில் அயோத்தியபட்டிணம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சண்முகப்பிரியா, உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ஸ்ரீ நிறைமதி தோட்டக்கலை உதவி இயக்குனர் கோதைநாயகி மற்றும் கால்நடை உதவி மருத்துவர் பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டு உழவர் பயிற்சி நிலைய செயல் பாடுகள், வேளாண் திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் கோதைநாயகி, மாடித் தோட்டம் அமைத்தல், தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை பூச்சி தாக்குதல், காண்டாமிருக வண்டு தாக்குதல், சிவப்பு கூன்வண்டு தாக்குதல், அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடுட்டு முறைகள் குறித்தும் தோட்டக்கலை மானியங்கள் குறித்தும், விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். கால்நடை உதவி மருத்துவர் பார்த்திபன் கால்நடைகளுக்கு கோடையில் ஏற்படும் கோமாரி தடுப்பு நோய் மற்றும் மாடித்தோட்டம் மடி நோய் குறித்து விளக்கம் அளித்தார்.

இப்பயிற்சியில் வேளாண்மை துணை அலுவலர் பிரபாகரன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் ராஜ்குமார் அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி வட்டார தொழில் நுட்ப மேலாளர் செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் விவசாயிகளுக்கு நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி மற்றும் தமிழ் செல்வி ஆகியோர் செய்து இருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வாலாஜா வட்டாரத்தில் விவசாயிகளுக்கான வயல் விழா நிகழ்ச்சி



ராணிப்பேட்டை, பிப்.16

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில், கல்மேல் குப்பம் கிராமத்தில், வேளாண்மை துறையின் சார்பாக ஆத்மா திட்டத்தில் விவசாயிகளுக்கான வயல்விழா மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி, வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை இணை இயக்குனர், மண்வளத்தை மேம்படுத்தும் உயிருரங்களின் முக்கியத்துவம், பயன்படுத்தும் முறையினை எடுத்துரைத்தார். உயிரியல் நோய் கட்டுப்பாட்டு காரணிகளின் செயல்பாடு மற்றும் பயிர் சுழற்சியின் அவசியம் குறித்து தெளிவாக விளக்கினார்.

வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி, மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில், மானியத்தில் வழங்கப்படும் பசுந்தாள் உரங்களின், மண் வளத்தில் அதன் முக்கியத்துவம், வரப்பில் உளுந்து நடும் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயிகள் அடையும் பயன்கள் ஆகியவற்றை தெளிவாக விளக்கினார்.

விதைச்சான்று அலுவலர் மண்டோதரி, விதை பண்ணை உற்பத்தியும் விதைகள் தேர்வு மற்றும் பராமரிக்கும் முறைகள், அறுவடைக்குப்பின் விதையில் இருக்கவேண்டிய ஈரப்பதம் ஆகியவற்றை குறித்து தெளிவாக விளக்கினார். ஆதிபராசக்தி வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் நவீன் குமார், அங்கக வேளாண்மை குறித்த தொழில்நுட்பங்கள் மண்புழு உரம் தயாரித்தல், பஞ்சகாவியா, அமிர்த கரைசல் ஜீவாமிர்தம் பயன்கள் குறித்து விளக்கினார்.

உதவி வேளாண்மை அலுவலர் ஞானசௌந்தரி, நுண்ணுயிர் பாசன திட்டத்தின் மூலம் விவசாயிகள் எவ்வாறு பயன் அடைதல்

மற்றும் வேளாண் விரிவாக்க மையத்தில் தற்போது இருக்கும் இடுபொருட்கள், நெற்பயிரில் பூச்சி கட்டுப்பாடு முறைகள் குறித்தும் விளக்கினார். நாகராஜ், வேளாண் மற்றும் விற்பனைத் துறை அலுவலர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் விவசாயிகள் எவ்வாறு தங்கள் உற்பத்தி பொருட்களை வியாபாரம் செய்வது குறித்து விளக்கினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சசிகலா, மண் வளத்தின் முக்கியத்துவம், மண்ணை எவ்வாறு சேகரித்து மண் ஆராய்ச்சி நிலையத்தில் மண்வள அட்டையை பெறுதல், உழவன் செயலி குறித்தும் விளக்கினார். நர்மதா, ஜெயபிரகாஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நன்றி கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தனர்.

# கிசான் கால் சென்டர்

# விழிப்புணர்வு ஏற்படுத்திய கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.16

பி.ஜி.பி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் விவசாயி களுக்காக கிசான் கால் சென்டர் (KCC) குறித்து ஒரு விழிப்புணர்வு விளக்கக் கூட்டத்தை நடத்தினர். இந்திய அரசு தொடங்கிய இந்த விவசாயி நட்பு சேவையின் மூலம், விவசாயிகள் தங்களின் வேளாண்மை தொடர்பான சந்தேகங் களுக்கு இலவசமாக ஆலோசனைகள் பெற முடியும். இந்த நிகழ்வில், மாணவிகள் கிசான் கால் சென்டர் செயல் பாடுகள், அதன் நோக்கங்கள் மற்றும் பயன்கள் குறித்து விவசாயி களுக்கு தெளிவாக விளக்கினார்கள். பயிர் மேலாண்மை, நோய் பூச்சி கட்டுப்பாடு, உர மேலாண்மை, வானிலை அடிப்படையி லான ஆலோசனைகள் மற்றும் அரசு திட்டங்கள் பற்றிய தகவல்களை 1800-180-1551 என்ற கட்டணமில்லா எண்ணின் மூலம் பெறலாம் என கூறினார்கள். இந்த விளக்க நிகழ்ச்சி, விவசாயிகள் சரியான நேரத்தில் முடிவெடுத்து உற்பத்தி மற்றும் வருமானத்தை உயர்த்த உதவும் வகையில் அமைந்தது.

# இன்று சிறுதானிய திருவிழா

மதுரை, பிப்.16

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரத்தில், பேரையூர் திவ்யகுரு மஹாலில் சிறுதானியங்களின் பயன்கள் அறியும் வகையில் வேளாண் துறை சார்பில் மாவட்ட அளவிலான சிறுதானியத் திருவிழா பிப்ரவரி 17ஆம் தேதி காலை 10.30 மணிக்கு துவங்குகிறது. மாவட்டத்தில் ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கும் தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலாக்கும் வகையிலும், சிறுதானிய உணவுப் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையிலும் இத்திருவிழா நடக்கிறது. வேளாண்துறை, அதைச் சார்ந்த துறை அலுவலர்கள், வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் ஆகியோர் தொழில் நுட்ப அறிவுரைகள் வழங்க உள்ளனர். பல்வேறு கருத்துக் காட்சி அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. விவசாயிகள், பொது மக்கள் பங்கேற்று சிறுதானியங்களின் பயன்களை அறியலாம்.

# மண் மாதிரி சேகரிப்பு பயிற்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.16

தேனி மாவட்டம், போடி வட்டாரம், சிலமலை கிராம பகுதியில் 24/01/26 அன்று மண் மாதிரி சேகரிப்பு (Soil Sampling) குறித்த பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்-ஐ சேர்ந்த வேளாண்மை மாணவி கிரிஜா, 25-26க்கான ஊரக வேளாண் அனுபவத் திட்டம் கீழ் நடத்தினார்.

இந்தப் பயிற்சியில் 10 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மண்ணை சரியான ஆழத்தில் (0-15 செ.மீ), சீரான இடைவெளியில் பல இடங்களில் எடுத்து கலவை மாதிரி

தயாரித்தல், கல், வேர், குப்பைகள் நீக்குதல், நிழலில் உலர்த்தி சரியான முறையில் பொதி செய்து ஆய்வுக்காக அனுப்புதல் போன்ற முக்கிய அம்சங்கள் குறித்து செய்முறை விளக்கம் வழங்கப்பட்டது. மேலும், மண் பரிசோதனை முடிவுகளின் அடிப் படையில் பயிர் தேவைக்கேற்ப உர அளவுகளை நிர்ணயிப்பது, மண் சத்துச் சமநிலையை பராமரித்தல், செலவைக் குறைத்து மகசூலை அதிகரித்தல் போன்ற பயன்கள் குறித்து விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்த பயிற்சி விவசாயிகளுக்கு நடைமுறை பயனளிக்கும் வகையில் வெற்றிகரமாக நிறைவேறியது.



# வருமானத்தை அள்ளித்தரும் ‘சங்குப் பூ‘ சாகுபடி



ஒரு காலத்தில் ஆன்மீக அலங்கார கொடி வகை பூ-வாக கருதப்பட்ட சங்குப் பூ (CLIRORIA TERNATEA) கண்ணை கவரும் நீல நிற மலர்களை கொண்ட செடி மூலிகை செடியாக (HERBEL PLANTS) கருதப் பட்டு இன்று இதனுடைய தேவை உலகளவில் இருப்பதால் ஒரு வணிக பயிராக மாறி வருகிறது.

குறிப்பாக இயற்கை உணவு பொருட்கள், மூலிகை சார்ந்த தயாரிப்புகள் மற்றும் பசுமை நிறமூட்டிகளில் சங்குப்பூவின் தேவை நாளுக்கு நாளாக அதிகரித்த நிலையில் இதனுடைய சந்தை வாய்ப்பு பிரகாசமாக இருப்பதால் இதனை ஒரு தனி பயிராக அரை ஏக்கர், ஒரு ஏக்கரில் சாகுபடி செய்து எவ்வித இரசாயனமின்றி எளிதாக செய்யலாம்.

**குறைந்த முதலீடு நிலையான விளைச்சல் தரும் சங்குப்பூ?**

காக்காட்டான் என்று அழைக்கப்படும் சங்குப்பூ நீல நிறம் அல்லது வெள்ளை நிற கொடி வகை பூ-வாகும். குறைந்த பாரமரிப்பில், குறைந்த நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் வளரும். ஒரு முறை நடவு செய்த பிறகு தொடர்ந்து மலர்களை அறுவடை செய்ய முடியும். நிறைய பூக்கள் உற்பத்தி செய்யும் திறனே இதனுடைய பலம்.

சிறிய நிலப்பரப்பிலும் பெண்கள் மற்றும் குடும்ப தொழிலாக எளிதாக மேற்கொள்ளலாம். இதனால் குறைவான மூதலிட்டில் அதிக வருமானம் தரும் (மற்ற பயிர்கள் சாகுபடியை விட).

**சங்குப் பூவின் மருத்துவ குணங்கள் தெரியுமா?**

வெறும் அலங்கார செடியாக பார்த்து பழகிய நமக்கு அதனுடைய மருத்துவ குணங்களை அறியும் போது புல்லரிக்கிறது. அது என்ன என்பதை பார்ப்போம்.

சங்குப்பூவில் இயற்கையான நிறமிகள் ஆன்டி ஆக்ஸிடென்ட நிறைந்த மூலிகை செயல்பாடு உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. அதுமட்டுமல்ல பாரம்பரிய மருத்துவ முறையில் இது நினைவாற்றல் மேம்பாடு, மன அழுத்த கட்டுபாடு மற்றும் உடல் சமநிலைக்கு உதவுகின்றன. அதுமட்டுமல்ல உணவு தயாரிப்புகளில் முக்கிய மூலப் பொருளாக உள்ளது.

இதனை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி (காய வைத்து, உலர வைத்து பொடியாக்கி) மூலிகை தேநீர், (BUTTER FLY TEA), இதர பானங்கள் (JUICE) காஸ்மாட்டிக் பயன்பாட்டிற்கு பூவின் (EXTRACT) பயன்படுத்தப்படுகிறது. மேலும் நீயூட் ராசூட்டிகல் (NUTRA CEUTICAL) பயன்படுத்தப்படுகிறது.

சங்குப்பூ மூலப்பொருளாக விற்பதை விட மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்தால் கூடுதலான வருமானம் கிடைக்கும்.

சங்குப் பூ வெறும் அலங்கார பூவாக பார்க்காமல் முழுமையான வணிக பூவாக பார்க்க வேண்டும். இதனுடைய தேவை நாளுக்கு நாள் அதிகரித்த நிலையில் சாகுபடி செய்யும் முன் நிலையான சந்தை வாய்ப்புக்காக ஒப்பந்த சாகுபடி செய்தால் நீடித்த நிலையான வருமானம் வரும்.

என்ன நினைக்கிறீங்க?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்



# விவசாயம் வாழ வேண்டும்!

# மாணவிகள் நடத்திய விழிப்புணர்வு பேரணி!!



கடலூர், பிப்.16

விவசாயிகள் தினத்தை முன்னிட்டு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் கல்லூரியின் RAWE (Rural Agricultural Work Experience) திட்ட மாணவிகள் (குழு-5) பங்கேற்றனர்.

பள்ளி மாணவர்களுடன் இணைந்து கிராமத்தில் விழிப்புணர்வு பேரணி நடத்தினார்கள்.

உணவூட்டும் விவசாயத்துக்கு உயிரூட்டுவோம் என்ற தலைப்பில் இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் விவசாயத்தின் முடிவு! மனிதகுலத்தின் அழிவு!!, விவசாயம் வாழ வேண்டும்!! விவசாயி ஆள வேண்டும்!!!.... போன்ற முழக்கங்களை எழுப்பி, விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

மேலும், கிராமப் பள்ளி வளாகத்திலும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டன. பள்ளியின் தலைமை யாசிரியரின் தலைமையில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ச்சி குறித்து மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. இந்த நிகழ்வு விவசாயம் மற்றும் இயற்கை பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.

இப்பேரணியில் (குழு-5) மாணவிகள் தாரணிபிரியா.கு, தரணியா.ச, தர்ஷினி.ப, தேசிஹா.செ, தேவிகா.ரா, திவ்ய பாரதி.ஆ, திவ்ய பாரதி.செ, திவ்யா லெட்சுமி.செ, திவ்ய ஸ்ரீ.ச, திவ்வியா ஸ்ரீ.ப.வி, திவ்யா.ஞா மற்றும் திவ்யா.பூ ஆகியோர் பங்கேற்றனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாயம் சார்ந்த தொழில்நுட்ப செயல் விளக்கம் வேளாண் அலுவலர் அசோக் பங்கேற்பு



சேலம், பிப்.16

சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டி வட்டாரத்திற்கு உட்பட்ட பள்ளி தெருப்பட்டி கிராமத்தில், விவசாயிகளின் சாகுபடித் திறனை மேம்படுத்தும் நோக்கில் இன்று சிறப்பு குழு செயல் விளக்க முகாம் நடைபெற்றது. சீலநாயக்கன்பட்டி பைபாஸ் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண் அலுவலர் (AO) அசோக் கலந்து கொண்டு, விவசாயிகளுக்குப் பல்வேறு நவீன வேளாண் நுட்பங்கள் குறித்து நேரடி செயல்விளக்கம் அளித்தார்.

**செயல்விளக்கத்தின் முக்கிய குறிப்புகள்**

**உயிரியல் நோய் கட்டுப்பாடு :** செடிகளைத் தாக்கும் வேர் அழுகல் மற்றும் வாடல் நோய்களைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் (Pseudomonas) உயிர் உரத்தைப் பயன்படுத்தும் முறை குறித்து விளக்கப்பட்டது. இது இரசாயனப் பயன்பாட்டைக் குறைத்து மண்ணின் வளத்தைப் பாதுகாக்கும்.

**விதை மற்றும் நுண்ணூட்டச் சத்து மேலாண்மை :** நிலக்கடலை மற்றும் பருத்தி பயிர்களுக்குத் தேவையான தரமான விதைகள் மற்றும் மகசூலை அதிகரிக்க உதவும் நுண்ணூட்டச் சத்து கலவை (Micro-nutrient mixture) பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**முட்டை ஒட்டுண்ணிகள் :** பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை ஆரம்ப நிலையிலேயே அழிக்க உதவும் முட்டை ஒட்டுண்ணி (Egg Parasite) அட்டைகளை வயல்களில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

**டிஜிட்டல் விவசாயம் :** விவசாயிகளுக்குத் தேவையான அரசின் திட்டங்கள், சந்தை நிலவரம் மற்றும் பூச்சி மேலாண்மை குறித்த தகவல்களை உடனுக்குடன் பெற உதவும் வேளாண் மொபைல்

செயலிகள் (Agri Apps) குறித்தும், அவற்றை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் முறை குறித்தும் விளக்கப்பட்டது.

அதிகாரியின் ஆலோசனை : நிகழ்ச்சியில் பேசிய வேளாண் அலுவலர் அசோக், 'இரசாயன உரங்களுக்கு மாற்றாக உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளை விவசாயிகள் கடைப்பிடிப்பதன் மூலம் குறைந்த செலவில் அதிக லாபம் பெற முடியும்,' என வலியுறுத்தினார்.

இந்த முகாமில் பள்ளிதெருப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரளான விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தங்கள் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டனர்.

## முதலகுளம் கிராமத்தில் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து பயிற்சி



மதுரை, பிப்.16

மதுரை மாவட்டம், முதலகுளம் கிராமத்தில் RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் மாணவி மு.ஹரிணி, மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி வழங்கினார். இப்பயிற்சியில் மண் பரிசோதனை செய்வதன் அவசியம், சரியான மாதிரி எடுக்கும் முறை மற்றும் பரிசோதனை அறிக்கையைப் புரிந்து கொள்ளும் வழிமுறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

மண் பரிசோதனை மூலம் நிலத்தின் pH, கார்பன் அளவு, நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற ஊட்டச்சத்து நிலைகளை அறிந்து, அதற்கேற்ற உரப் பரிந்துரைகளைப் பயன்படுத்தலாம் என அவர் எடுத்துரைத்தார். இதன் மூலம் தேவையற்ற உரச் செலவைக் குறைத்து, மகசூல் அதிகரிக்கவும், மண் வளத்தைப் பாதுகாக்கவும் முடியும் என விவசாயிகளுக்கு எடுத்துக்கூறப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் ஆர்வத்துடன் கேள்விகள் எழுப்பித் தெளிவு பெற்றனர். இத்தகைய பயிற்சிகள் நிலைத்தன்மை கொண்ட வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் பயனுள்ளதாக அமைகின்றன.

# நஞ்சில்லா நெல் சாகுபடி: மேலவளவில் வேளாண் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு



மதுரை, பிப்.16

காரைக்குடி சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள், கிராமப்புற விவசாயப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக மதுரை மாவட்டம், மேலவளவு கிராமத்தில் தங்கி விவசாயிகளுடன் இணைந்து களப்பணியாற்றி வருகின்றனர்.

### இரசாயனப் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள்

தற்போது விவசாயிகள் பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக் காக அதிகளவில் இரசாயனப் பூச்சிக்கொல்லிகளைப் பயன் டுத்தி வருகின்றனர். இதனால் சாகுபடி செலவு அதிகரிப்பதோடு, விளைபொருட்களிலும் நச்சுத்தன்மை கலக்கிறது. குறிப்பாக, நெல் கதிர் விடும் பருவத்தில் தெளிக்கப்படும் வீரியமிக்க இரசாயனங்கள், நுகர்வோரின் ஆரோக்கியத்திற்குப் பெரும் சவாலாக அமைகின்றன என்பதை மாணவிகள் சுட்டிக்காட்டினர்.

### ஒருங்கிணைந்த சாகுபடியின் அவசியம்

விவசாயிகள் தனித்தனியாக வெவ்வேறு ரகங்களைச் சாகுபடி செய்வதால் ஏற்படும் சிக்கல்கள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**ஒரே கால அறுவடை :** விவசாயிகள் அனைவரும் ஒருங் கிணைந்து, அந்தந்தப் பருவத்திற்கு ஏற்ற ஒரே வயதுடைய ரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

**பூச்சி மேலாண்மை :** வெவ்வேறு காலக்கட்டங்களில் பயிர் செய்வதால் பூச்சிகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாகப் பரவி சேதத்தை உண்டாக்குகின்றன. ஒரே நேரத்தில் சாகுபடி செய்தால் பூச்சித் தாக்குதல் பரவலாகக் குறைந்து பாதிப்பு மட்டுப்படும்.

**அறுவடை எளிமை :** பயிர்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் அறுவடைக்குத் தயாராவதால், இயந்திரங்களை எளிதாகப் பயன்

படுத்தலாம். நெல் மணிகள் வயலில் உதிர்ந்து ஏற்படும் பொருளாதார இழப்பையும் தவிர்க்கலாம்.

### கள ஆய்வு மற்றும் அனுபவப் பகிர்வு

மேலவளவு உயிரியல் காரணிகள் உற்பத்தி மைய மகளிர் களுடன் இணைந்து மாணவிகள் நேரடியாக வயல்வெளி களுக்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்தனர். மேலும், அங்குள்ள பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்ட வயல்களைப் பார்வையிட்டு, முன்னோடி விவசாயிகளின் அனுபவங்களைக் கேட்டறிந்தனர்.



# பருத்தி பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து பயிற்சி



மதுரை, பிப்.16

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவி ப.கௌசல்யா, செல்லம்பட்டி வட்டாரம், பொட்டலுப்பட்டி கிராமத்தில் பருத்தி பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM - Integrated Pest Management) தொடர் பாக விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.

இப்பயிற்சியில், பருத்தி பயிரில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் இளஞ்சிவப்பு புழு, வெள்ளை ஈ, தண்டு துளைப்பான் போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறை களை பின்பற்றுவதன் அவசியம் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

**பயிற்சியில் எடுத்துரைக்கப்பட்ட முக்கிய அம்சங்கள்**

தரமான மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகள் பயன்படுத்துதல், விதை நேர்த்தி செய்து விதைப்பு செய்தல், சரியான இடைவெளியில் விதைப்பு செய்து காற்றோட்டம் ஏற்படுத்துதல், மஞ்சள் மற்றும் நீல ஒட்டுப் பலகைகள் அமைத்து பூச்சி கண்காணித்தல், பெரோமோன் கண்ணிகள் அமைத்து இளஞ்சிவப்பு புழு தாக்குதலை முன் கூட்டியே கண்டறிதல், டிரைகோகிராமா, கிரைசோப்பா போன்ற உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் பயன்படுத்துதல், பரிந்துரைக்கப் பட்ட அளவில் மட்டுமே இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்துதல் மற்றும் வயல் சுத்தம் மற்றும் பயிர் சுழற்சி கடைபிடித்தல்.

**IPM முறையின் பயன்கள்**

பூச்சி தாக்குதலை ஆரம்ப கட்டத்திலேயே கட்டுப்படுத்த முடியும். மருந்து செலவு குறையும், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். இயற்கை பகை பூச்சிகள் பாதுகாக்கப்படும், அதிக மற்றும் தரமான மகசூல் கிடைக்கும். விவசாயிகளின் வருமானம் உயரும்,

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறையை பின்பற்றுவதன் மூலம் பருத்தி பயிரில் பூச்சி தாக்குதலை திறம்பட கட்டுப்படுத்தலாம் என கருத்து தெரிவித்தனர்.

# மக்காச்சோளத்தில் படையெடுக்கும் புழு தாக்குதல் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விழிப்புணர்வு பயிற்சி



தேனி, பிப்.16

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போ.மீனாட்சிபுரம் கிராமத்தில் மக்காச்சோள பயிரில் ஏற்படும் படைப்புழு (Fall Army Worm) தாக்குதல் மற்றும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சியை மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவி இம்ரானா.ப, RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் நடத்தினார். பயிற்சியின் போது மக்காச்சோளத்தில் படைப்புழுவால் ஏற்படும் இலை சேதம், மையப்பகுதியில் தோன்றும் துளைகள், இலைகளில் சுருள் வடிவ சேதம், கருப்பு நிற மலவிடல்கள் போன்ற அடையாளங்களை விளக்கினார். மேலும் இந்த பூச்சி பரவுவதற்கான காரணங்கள், அதிக தாக்கம் ஏற்படும் காலகட்டம் மற்றும் அதனால் விளைச்சலில் ஏற்படும் இழப்புகள் குறித்தும் எடுத்துரைத்தார். படைப்புழுவை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. இதில் முட்டை கூட்டங்களை கைமுறையில் அகற்றுதல், வயலில் சுத்தம் பேணுதல், பேரோமோன் வலைகள் அமைத்தல், பறவை அமர்வு கம்பிகள் அமைத்தல், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளை சரியான அளவில் பயன்படுத்துதல் போன்ற முறைகள் குறித்து விவரிக்கப் பட்டது.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் பூச்சி தாக்குதல், மருந்து தேர்வு, மருந்து தெளிக்கும் காலம் மற்றும் பாதுகாப்பு முறைகள் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பினர். அவற்றிற்கு மாணவி இம்ரானா பி தெளிவான மற்றும் விவரமான விளக்கங் களை அளித்தார். இதன் மூலம் விவசாயிகள் பயனடைந்ததாக தெரிவித்தனர். இந்தப் பயிற்சி மூலம் விவசாயிகளிடையே மக்காச்சோளத்தில் படைப்புழு தாக்குதலை குறைத்து, பயிர் மகசூலை உயர்த்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.

# இயற்கை வேளாண் பண்ணையில் வேளாண் கல்லூரி மாணவர்கள் களப்பயிற்சி




நாமக்கல், பிப்.16

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள், தங்களது கிராமப்புற அனுபவப் பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக எலச்சிப்பாளையம் பகுதியில் உள்ள விவசாயிகளை தொடர்ந்து சந்தித்து களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில், பெரியமணலி கிராமத்தில் செயல்பட்டு வரும் இயற்கை விவசாயி அருண்குமாரின் பண்ணையை மாணவர்கள் நேரில் பார்வையிட்டு, இயற்கை விவசாய முறைகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தனர்.

ஐ.டி. துறையில் பணியாற்றி வருவதுடன், பகுதி நேரமாக இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வரும் அருண்குமார், வேலை மட்டுமல்ல, விவசாயமும் வாழ்க்கையின் ஒரு பொறுப்பு என்ற மனப்பான்மையுடன் இயற்கை முறைகளை பின்பற்றி வருகிறார். மண் வளத்தை பாதுகாக்க ஜீவாமிர்தம், பஞ்சகவ்யம் போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்துவது, நச்சில்லா பூச்சி விரட்டிகளை தயாரித்து பயிர்களை பாதுகாப்பது, நீர் சேமிப்பு முறைகளை கடைபிடிப்பது ஆகியவற்றை அவர் நடைமுறையில் செயல்படுத்தி வருகிறார்.

மாணவர்கள் பண்ணையில் பயிரிடப்பட்டிருந்த காய்கறி மற்றும் தானியப் பயிர்களை பார்வையிட்டு, செலவைக் குறைத்து மகசூலை உயர்த்தும் வழிமுறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. குறிப்பாக, இயற்கை விவசாயம் என்பது ஒரு தொழில் மட்டுமல்ல; அது நிலத்தையும், மனித ஆரோக்கியத்தையும் காப்பாற்றும் வாழ்வியல் முறையாகும் என அருண்குமார் வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பு மாணவர்களுக்கு பயிற்சியையும், உந்துதலையும் அளித்தது. நவீன தொழில்நுட்ப துறையில் பணியாற்றியவராக இருந்தும், இயற்கையை நோக்கி திரும்பிய அவரின் பயணம், இளைஞர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைந்தது. கிராமப்புற அனுபவப் பயிற்சியின் மூலம் இத்தகைய நேரடி கள அனுபவங்கள் மாணவர்களின் அறிவையும், சமூகப் பொறுப்புணர்வையும் மேலும் வளப்படுத்துகின்றன.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நெற்பயிரில் அசோலா வளர்ப்பு குறித்து செய்முறை விளக்கம்



தேனி, பிப்.16

தேனி மாவட்டம், உத்தமபாளையம் பகுதியில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவி தேவிகா என்.எஸ்., இப்பகுதி விவசாயிகளுக்கு நெல் வயல்களில் அசோலா வளர்ப்பதன் மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்துவது மற்றும் ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைப்பது குறித்து செய்முறை விளக்கம் அளித்தார்.

அசோலா வளர்ப்பதற்கான முறைகள், அதற்குத் தேவையான நீர் மேலாண்மை, பராமரிப்பு முறைகள், அசோலா மூலம் நெற்பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூல் அதிகரிக்கும் விதம் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், அசோலா ஒரு இயற்கை நைட்ரஜன் வழங்கும் பசுந்தீவனமாகவும், மண் உயிரியல் செயல்பாடுகளை மேம்படுத்தும் உயிர் உரமாகவும் செயல்படுவதை விளக்கினார்.

தமிழ்நாடு கிராமப்புற விவசாயப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட இந்த செய்முறை விளக்கம், குறைந்த செலவில் அதிக லாபம் பெறும் இந்த தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளிடையே ஆர்வத்தை ஏற்படுத்தி, பெரும் வரவேற்பைப் பெற்றது.

# தென்னை டானிக் பயன்பாடு குறித்து செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, பிப்.16

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், மேலவண்ணாரிப்பூ கிராமத்தில் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு சார்ந்த மாணவர்கள் ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சி (RAWE) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தென்னை டானிக் பயன்பாடு குறித்து செய்முறை விளக்கம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தென்னை மரங்களில் குருத்தழுகல், காய்ச்சல், மகசூல் குறைவு போன்ற பிரச்சனைகளை கட்டுப்படுத்த TNAU தென்னை டானிக் பயன்பாடு குறித்து விளக்கப்பட்டது. தென்னை டானிக்கில் உள்ள முக்கிய ஊட்டச்சத்துக்கள் மர வளர்ச்சியை ஊக்குவித்து, பூச்சி தாக்கத்தை குறைத்து, காய் பிடிப்பை அதிகரிக்க உதவுகின்றன என மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

மேலும், தென்னை டானிக் பயன்படுத்தும் முறை, அளவு, இடைவெளி மற்றும் வேர் ஊட்டம் (Root feeding) மூலம் பயன்படும் விதம் குறித்து விவசாயிகளுக்கு நேரடி விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த செய்முறை விளக்கம் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தென்னை சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து பயனடைந்தனர்.

# விவசாயிகள் வயலில் பாஸ்போபாக்டீரியா பயன்பாட்டு விளக்கக் காட்சி



நாமக்கல், பிப்.16

நாமக்கல் மாவட்டம், மல்ல சமுத்திரம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் வயலில் பாஸ்போ பாக்டீரியா (Phosphobacteria) பயன்பாடு குறித்து விளக்கக் காட்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி விவசாயிகளுக்கு மண் வளத்தை மேம்படுத்தி, பயிர் வளர்ச்சியை அதிகரிக்கும் உயிரி உரங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைப் பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வேளாண்மை அலுவலர்கள் மற்றும் நிபுணர்கள், பாஸ்போபாக்டீரியா பயன்பாட்டின் முறைகள், விதை சிகிச்சை, நிலப் பயன்பாடு மற்றும் தண்ணீர் கலவை மூலம் பயன்படுத்தும் நடைமுறைகள் குறித்து நேரடி விளக்கம் அளித்தனர். மேலும், இந்த உயிரி உரம் பாஸ்பரஸ் சத்தினை செடிகள் எளிதாக எடுத்துக்கொள்ள உதவி செய்து, உரச் செலவை குறைத்து விளைச்சலை அதிகரிக்கும் என்று தெரிவித்தனர்.

இந்த விளக்கக் காட்சியில் பலர் கலந்து கொண்டு தங்களது சந்தேகங்களை கேட்டறிந்து பயனடைந்தனர். இயற்கை வேளாண்மை முறைகளை ஊக்குவிக்கும் இந்த முயற்சி, மல்ல சமுத்திரம் பகுதி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.


# விவசாயிகளுக்கு நானோ யூரியா குறித்து விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.16

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் தங்களது கிராமப்புற அனுபவப் பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளை நேரில் சந்தித்து களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில், இன்றைய தினம் அகரம் கிராமத்தில் விவசாயிகளை சந்தித்து நானோ யூரியா பயன்பாடு குறித்து விரிவான விளக்கத்தை வழங்கினர். பாரம்பரிய யூரியா உரத்திற்கு மாற்றாக அறிமுகமான நானோ யூரியா குறைந்த அளவிலேயே அதிக செயல்திறன் வழங்கும் திறன் கொண்டது என்பதையும், இது இலை வழி தெளிப்பு முறையில் பயன்படுத்தப்படுவதால் தாவரங்கள் விரைவாக ஊட்டச்சத்துகளை உறிஞ்சிக் கொள்ளும் என்பதையும் மாணவர்கள் விளக்கினர்.

மேலும், நானோ யூரியாவை தயாரித்து விநியோகம் செய்து வரும் Indian Farmers Fertiliser Cooperative Limited (IFFCO) நிறுவனம் குறித்தும் அறிமுகப்படுத்தினர். ஒரு ஏக்கருக்கு சுமார் 2-4 மில்லி அளவு ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம் என்றும், பயிரின் வளர்ச்சி நிலையைப் பொறுத்து 30-35 நாட்கள் இடைவெளியில் தெளிப்பது சிறந்த பலனை தரும் என்றும் தெரிவித்தனர். இதன் மூலம் மண் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுவதோடு, உரச் செலவையும் குறைக்க முடியும் என்பதையும் எடுத்துரைத்தனர். விவசாயிகளும் ஆர்வத்துடன் கேள்விகள் எழுப்பி, தங்கள் வயல்களில் இதனை செயல்படுத்த முன்வந்தனர். இந்த களப்பயிற்சி நிகழ்வு விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் பயனுள்ள முயற்சியாக அமைந்தது.



# மண் மாதிரி சேகரிப்பு பற்றி செயல் விளக்கம் செய்த வேளாண் கல்லூரி மாணவர்!



மதுரை, பிப்.16

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி அருகே உள்ள 18 சுக்காம்பட்டி கிராமத்தில், மண் மாதிரி சேகரிப்பு பற்றி செயல் விளக்கப் பயிற்சி. விவசாயத்தில் விளைச்சல் உயர்வுக்கும் செலவுக் குறைப்புக்கும் மண்ணின் தரம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மண்ணில் உள்ள சத்துக்கள், குறைபாடுகள் மற்றும் தன்மைகளை அறிந்து உரங்களை சரியான அளவில் பயன்படுத்துவதற்காக மண் பரிசோதனை அவசியமாகும். இதனை விவசாயிகளுக்கு விளக்குவதற்காக, மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர் மோத்திஷ்கிரண் ர ம, ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டதின் (RAWE) கீழ் மண் மாதிரி சேகரிப்பு முறைகள் குறித்த செய்முறை விளக்கப் பயிற்சி நடத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், மண் மாதிரி எடுப்பதின் அவசியம், சரியான முறை மற்றும் எடுக்கும்போது கடைபிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைக்கப் பட்டது. மண் மாதிரி தவறாக எடுக்கப்பட்டால், பரிசோதனை முடிவுகளும் தவறாக வரும் என்பதையும் மாணவர் விளக்கினார். மண்மாதிரி சேகரிப்பு பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு, அதில் உள்ள சத்துக்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

**மண் மாதிரி சேகரிப்பு முறை**

வயலை சமமான பகுதிகளாக பிரித்து, ஜிக்–ஜாக் முறையில் பல இடங்களில் இருந்து மண் எடுக்க வேண்டும். பயிர் நிலங்களில் பொதுவாக 0–15 செ.மீ ஆழத்தில் மண் எடுக்க வேண்டும். மரப்பயிர்களுக்கு (தேங்காய், மா போன்றவை) 30–60 செ.மீ ஆழத்தில் மண் எடுக்க வேண்டும். எடுத்த மண்ணை ஒரு சுத்தமான இடத்தில் சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். கலக்கப்பட்ட மண்ணை குவாட்டரிங் முறை மூலம் நான்கு பகுதிகளாகப் பிரித்து, எதிர் எதிர் பகுதிகளை நீக்கி, மீதமுள்ளதை கலந்து தேவையான அளவு மாதிரி எடுக்க வேண்டும். கற்கள், வேர் துண்டுகள், இலைகள் ஆகியவை அகற்றப்பட வேண்டும். சேகரித்த மண்ணை சுத்தமான துணி அல்லது பாலிதீன் பையில் நிரப்ப வேண்டும்.

### செய்ய வேண்டியவை (Do's)

வயல் தயாரிப்பு அல்லது உரம் இடுவதற்கு முன் மண் மாதிரி எடுக்க வேண்டும். சுத்தமான கருவிகளை பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும்.

### செய்யக்கூடாதவை (Don'ts)

உரம், சாணம், சுண்ணாம்பு போடப்பட்ட இடங்களில் இருந்து மண் எடுக்கக் கூடாது. நீர் தேங்கி நிற்கும் இடங்கள், புல்வெளி, மர நிழல் பகுதிகளை தவிர்க்க வேண்டும். ஈரமான மண்ணை நேரடியாக பையில் அடைக்கக் கூடாது. இந்த விளக்க நிகழ்ச்சியில், மண் மாதிரி சேகரிப்பை மாணவர் நேரடியாக செய்து காட்டியதால் விவசாயிகள் எளிதில் புரிந்து கொண்டனர். மண் பரிசோதனை செய்தால், தேவையான சத்துக்கள் மட்டும் வழங்க முடியும், உர செலவு குறையும், மண் வளம் பாதுகாக்கப்படும் மற்றும் விளைச்சல் அதிகரிக்கும் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.செயல் விளக்கப் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பு தொடர்பான துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டது.

இந்த பயிற்சி நிகழ்ச்சி, விவசாயிகளுக்கு அறிவியல் அடிப்படை யிலான விவசாயத்தை மேற்கொள்ள உதவும் ஒரு பயனுள்ள முயற்சியாக அமைந்தது. மாணவர்களின் இத்தகைய முயற்சிகள், கிராமப்புற விவசாய வளர்ச்சிக்கு பெரும் துணையாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பட்டுப்புழுவியலில் ஊசி ஈக்களுக்கான தடுப்பு முறைகள் குறித்து விளக்கம் அளித்த மாணவர்கள்

கிருஷ்ணகிரி, பிப்.16

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பட்டுப்புழுவியல் துறையின் நான்காம் ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் ஓசூர் வட்டத்தில் தங்கி பட்டுப்புழுவில் துறையில் பயிற்சி பெற்று வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக சிகரப்பள்ளி கிராமத்தில் உள்ள விவசாயி சீதாவைச் சந்தித்து ஊசி ஈ தடுப்பு முறைகள் பற்றி விளக்கம் அளித்தனர். இளம் ஆய்வாளர் லோகமூர்த்தியின வழிகாட்டலில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

### ஊசி ஈ-யின் ஒருங்கிணைந்த தடுப்பு முறைகள்


ஊசி ஈ பட்டுப்புழுவின் உள் ஒட்டுண்ணியாக இருந்து 20-30 சதம் பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வருமான இழப்பை ஏற்படுத் தும். ஊசி ஈ பட்டுப் புழுக்களை 3, 4-ம் பருவத்தில் தாக்கினால் பட்டுப்புழு கூடு

கட்டுவதற்கு முன்பாகவே இறந்து விடுகிறது. 5-ம் பருவத்தில் ஊசி ஈ தாக்கினால், பட்டுப் புழுவானது தரம் குறைந்த மெல்லிய கூடுகளை கட்டுகிறது. அதிலிருந்து ஊசி புழு வெளியே வருகிறது. பட்டுக்கூட்டில் ஊசிப்புழு வெளிவந்த இடம் துளையாக காணப்படும். இந்த கூடுகள் பட்டுநூற்புக்கு உகந்ததல்ல.

பட்டு வளர்ப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் ஊசி ஈக்களைக் கட்டுப்படுத்த ஓரிரு தடுப்பு முறைகள் மட்டும் பயன் அளிக்காது. பின்வரும் ஒருங்கிணைந்த தடுப்பு முறைகள் மூலம் மட்டுமே ஊசி ஈக்களை கட்டுப்படுத்த இயலும் என்பதை பட்டு விவசாயிகள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

1. ஊசி ஈ புழு வளர்ப்பு மனைக்குள் நுழையாமல் தடுக்க சன்னல்கள், கதவுகள் போன்றவற்றிற்கு நைலான் வலைகளை அவசியம் அமைத்தல்.

2. மனையின் நுழைவு வாயிலில் நைலான் வலை கொண்டு தடுப்பு அறை (Ante-chamber) அமைத்தல்.



வெள்ளை நிறத் தட்டில் ஊசி ஈ கவர்ச்சிக் கரைசல்



வெள்ளை நிறத் தட்டில் ஊசி ஈ கவர்ச்சிக் கரைசல் பட்டுப்புழு வளர்ப்பு அறையின் உட்புறமும் வெளிப்புறமும்



நீசோலிங்கஸ் தைமஸ் ஒட்டுண்ணி சிறு பையில்



பட்டுப்புழு வளர்ப்புத் தாங்கியில் கட்டித் தொங்க விடப்பட்ட நீசோலிங்க்ஸ் தைமஸ் ஒட்டுண்ணி

3. புழு வளர்ப்பு மனைகளின் தரைப்பகுதி மற்றும் சுவர்களின் கீழ் பகுதிகளில் விரிசல்கள், இடைவெளிகள், வெடிப்புகள் இல்லாமல் சிமெண்ட் பூசி முன்னெச்சரிக்கை நடவடிக்கை செய்தல்.

4. புழு வளர்ப்பு மனையில் ஊசி ஈ உள்ளதா என்று அவ்வப்போது கண்காணித்து உடனுக்குடன் ஈக்களை அழித்தல்.

5. மல்பெரி இலையை மனைக்குள் எடுத்துச் செல்லும் போது ஊசி ஈக்கள் இல்லை என்பதை உறுதி செய்து விழிப்புடன் கண்காணித்தல்.

6. ஊசி ஈ கவர்ச்சிப் பொறி மாத்திரை கரைசலை வெள்ளை நிற தட்டில் சன்னல் மற்றும் கதவுகளுக்கு அருகே வைத்தல். ஒரு மாத்திரையை ஒரு லிட்டர் நீரில் கலக்கவும்.

7. புழு வளர்ப்பு மனையில் ஊசி ஈ-யின் கூட்டுப்புழுவை அழிக்கும் நிசோலிங்க்ஸ் தைமஸ் (Nesolynx thymus) எனும் ஒட்டுண்ணிகளை பட்டுப்புழுவின் 5-ம் பருவத்தின் 2-ம் நாளில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு 2 பைகள் (Pouches) வீதம் பயன்படுத்த வேண்டும்.

கூடுகட்டும் படல்களில் பட்டுப்புழுக்கள் முழுவதையும் கூடுகட்ட விட்ட பின்னர் அந்த 2 பைகளை (Pouches) கூடு கட்டும் படல்களின் அருகில் மாற்றிவைக்க வேண்டும். பட்டுக்கூடுகளை படல்களில் இருந்து அறுவடை செய்த பின் படல்களில் அருகில் வைக்கப்பட்ட அந்த 2 பைகளை எடுத்து எருக்குழியின் அருகில் வைக்கவும். இதிலிருந்து வெளிவரும் ஒட்டுண்ணி 5-6 நாட்கள் உயிர்வாழ்ந்து ஊசி ஈ கூட்டுப்புழுக்களை தேடிச் சென்று அழிக்கும். ஒரு பெண் ஒட்டுண்ணி 250 முட்டைகளை 5-6 ஊசி ஈ கூட்டுப்புழுக்கள் மீது இடும். இந்த முட்டைகள் ஊசி கூட்டுப்புழுக்களின் உள் ஒட்டுண்ணி யாக வளர்ந்து ஊசி ஈ கூட்டுப்புழுக்களை அழிக்கும் தன்மை உடையது.

8.ஒவ்வொரு புழு வளர்ப்பின் போதும் தொடர்ந்து ஒட்டுண்ணி களை தொங்க விடுதல்.

9. ஊசி ஈ கூட்டுப்புழுக்கள் மற்றும் ஊசி ஈயால் பாதிப்படைந்த புழுக்களை சேகரித்து தீயிலிட்டு எரித்தல்.

10. மின் பொறி (Electric Fly Trap), கொசு மின்மட்டை (Mosquito Bat) போன்றவற்றை பயன்படுத்தி ஊசி ஈக்களை அழித்தல்.

11. எலிப்பிடிக்க பயன்படுத்தும் பசை ஒட்டிய அட்டைகள், மல்பெரி குச்சிகளை கதவு மற்றும் சன்னல் அருகே வைப்பதன் மூலம் ஈக்கள் பசையில் ஒட்டி பறக்க முடியாமல் அழியும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

